5th International Research Symposium – 2015

# *IntSym 2015*

## Emerging Trends and Challenges in Multidisciplinary Research

Proceedings

07th and 08th December 2015

South Eastern University of Sri Lanka (SEUSL)

**Chief Editor**

Dr. A M. Muzathik

**Co-editors**

Mr. M.H. Thowfeek

Dr. P. Elango

Dr. K. Komathiraj

Ms. M.M. Mashroofa

Mr. M.M. Fazil

Dr. N.W.B. Balasooriya

Dr. A. Jahfer

**ISBN: 978-955-627-063-1**

Published By:
South Eastern University of Sri Lanka
University Park
Oulvil 32360
Sri Lanka

© South Eastern University of Sri Lanka 2015
This work is subject to copyright. All the rights are reserved by the publisher. Nothing in this work may be reproduced in any form, any part or as a whole, without express a written permission from the publisher.

Disclaimer
The views expressed remain the responsibly of the named authors and do not necessarily reflect those of publisher.

# தீவக-கேரள இஸ்லாமியர்களின் பண்பாட்டு வேற்றுமைகள்- சமூக மற்றும் வரலாற்றியல் அடிப்படையிலான ஒப்பியல் நோக்கு

க. அருந்தவராஜா

வரலாற்றுத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
arunn.msu@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**
இக்கட்டுரை தீவக-கேரள இஸ்லாமியர்களின் பண்பாட்டு வேற்றுமைகள் பற்றிய சமூக மற்றும் வரலாற்றியல் அடிப்படையிலான ஒரு ஒப்பீட்டு ஆய்வாக அமைகின்றது. பொதுவாகப் பண்பாடென்பது மனித வாழ்க்கை முறைகளின் அடிப்படையில் தோற்றம் பெறுவதாகும். மேலும் மக்களது நடத்தைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்பாகவும் இது காணப்படுகின்றது. கி.பி. 7ம் நூற்றாண்டுகளில் இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் முஸ்லிம்களின் குடிப்பரம்பல் மெதுவாக அதிகரிக்க ஆரம்பித்த காலத்தினை அடிப்படையாகக் கொண்டு அவர்களது பண்பாடும் நோக்கத்தக்கது. அதன்படி இந்தியாவின் கேரளா மற்றும் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு தென்மேற்கே அமைந்துள்ள தீவுக் கூட்டங்களில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்களின் பண்பாடு சார்ந்த வேற்றுமைகளை இனங்காண்பது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இவ்வாய்வானது ஒப்பீட்டு ஆய்வு முறையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இதற்கு முதலாம், இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**Keywords:** பூர்வீகம், மதநம்பிக்கை, சடங்குகள், பண்பாடு, மலையாள இஸ்லாமியர்கள்

## ஆய்வின் அறிமுகம்

பொதுவாகப் பண்பாடெனப்படுவது வாழ்க்கை முறையின் அடிப்படையில் தோற்றம் பெறுவதே. மக்களது நடத்தைகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் தொகுப்பாக இது அமைகின்றது. இதனால் மனிதர்களுடன் மட்டுமே தொடர்புடைய பதமாக இப் பண்பாடென்ற பதத்தினைக் குறிப்பிடலாம். அந்தவகையில் இன்று உலகில் முக்கியமான மதங்களிலொன்றாகக் கருதப்படுகின்ற இஸ்லாமிய மதத்தினைப் பின்பற்றி வருகின்ற இஸ்லாமியர்கள் எனப்படுகின்ற முஸ்லிம் மக்கள் இல்லாத தேசங்களே இல்லையெனலாம். அங்கெல்லாம் அவர்கள் தங்களது மத நம்பிக்கைகளையும் பண்பாட்டு நெறிமுறைகளையும் சிறப்பாகப் பின்பற்றி வருபவர்களாகவே காணப்படுகின்றனர்.

கி.பி 7ஆம் நூற்றாண்டில் இஸ்லாத்தின் எழுச்சியுடன் ஆரம்பித்த அராபியர்களின் ஆதிக்கப் படர்ச்சியானது பின்நாளில் அது இஸ்லாமியர்களின் ஆதிக்கப் படர்ச்சியாக மாறி ஐரோப்பா, ஆபிரிக்கா என்பனவற்றினையும் தாண்டி இந்தியாவரை சென்றது. இடைக்கால இந்திய வரலாறு முழுவதுமே இவர்களது வரலாறாகவே காணப்படுகின்றது. மொகலாயர்களின் வீழ்ச்சியுடன் இஸ்லாமியர்களது செல்வாக்கானது இந்தியாவை விட்டு அகன்று சென்றாலும் அவர்கள் தமது மதத்தினையும் அதுசார்ந்த மக்களையும் எச்சங்களாக இந்தியாவில் விட்டுச்சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தகைய எச்சங்களில் ஒரு பகுதியே தென்னிந்திய நிலப்பரப்புக்களிலொன்றாகக் கருதப்படுகின்ற கேரளா என்ற மாநிலத்தில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்களாவர்.

இலங்கையைப் பொறுத்தவரையில் அதற்கு கி.பி 7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரேதான் அதனுடன் அராபியர்களுடன் தொடர்புகள் இருந்ததென்ற கருத்துக்கள் பொதுவாகக் காணப்பட்டிருந்தாலும் கூட அதற்கு முன்னரான காலத்தில் இலங்கைக்கும் அராபியர்களுக்குமிடையிலே தொடர்புகள் காணப்பட்டதென்ற கருத்தினையும் முற்றாக மறுக்கவும் முடியாது *(அருந்தவராஜா, 2012)*. இவர்களது குடியேற்றங்கள் ஆரம்ப காலங்களில் இலங்கையில் எப்பகுதியில், எக்காலப்பகுதியில் இடம்பெற்றன என்பது தொடர்பாகன கருத்து முரண்பாடுகள் வரலாற்று அறிஞர்களிடையிலே இருந்து வருகின்றன. எது எவ்வாறாயினும், இஸ்லாமியர்கள் இலங்கையில் நிரந்தரமாகக் குடியேறி வாழத் தொடங்கியது பிற்பட்ட காலமேயென்பது குறிப்பிடத்தக்கதாகும். அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இவர்களது நிலையான ஆரம்பகாலக் குறியேற்றங்கள் கி.பி 13ஆம் நூற்றாண்டளவில் நல்லூரினை அண்டிய பிரதேசங்களில் ஏற்பட்டதை அக்கால, சமகால மற்றும் பிற்பட்டகால ஆதாரங்கள் தெளிவுபடுத்துகின்றன *(மயில்வாகனப் புலவர்,2000)*. வட இலங்கையின் ஒரு பகுதியாகக் காணப்படுகின்ற ஆய்வுப் பிரதேசங்களான தீவுப்பகுதிகளில் இவர்களது குடியேற்றங்கள் யாவும் ஒல்லாந்தர் காலத்துடனே ஆரம்பித்தன.

யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குத் தென்மேற்கே அமைந்துள்ள தீவுக் கூட்டங்கள் வரலாற்றுக் காலம் முதற்கொண்டே சமூக, பொருளாதாரப் பண்பாட்டினடிப்படையில் சிறப்பிடத்தினைப் பெற்றிருப்பதனைச் சான்றுகள் கூறுகின்றன. இந்துக்களே அதிகளவில் வாழ்ந்து வருகின்ற இப்பிரதேசத்தில் தொகையில் குறைந்தளவு காணப்படுகின்ற இஸ்லாமிய மக்கள் தமக்கே உரிய தனித்துவமான பண்பாட்டு அடையாளங்களைப் பேணிவருகின்றனர். இவர்கள் மதத்தினால் இஸ்லாமியர்களாக இருந்தாலும் பிற தேசங்களில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்களிடமிருந்து குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மாறுபட்ட சில பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டவர்களாக வாழ்ந்து வருகின்றனர். அந்தவகையில் இத்தகைய இவர்களது சிறப்பான பண்பாட்டு அடையாளங்கள், வட இலங்கைக்கு அண்மையிலுள்ள இந்தியாவின் கேரள மாநிலத்தில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்களின் பண்பாட்டம்சங்களிலிருந்து பல்வேறு விடயங்களில் வேறுபடுவதனை அவதானிக்க முடிகின்றது. உண்மையில் தீவகத்தில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்களின் பூர்வீகமானது கேரளாவாக இருந்தாலுங்கூட பல விடயங்களில் வேறுபட்ட பண்பாட்டு இயல்புகளை அவர்கள் உள்வாங்கியவர்களாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இரு பிரதேசங்களிலும் வாழ்கின்ற இவர்களுக்கிடையிலே காணப்படுகின்ற இத்தகைய பண்பாட்டு வேற்றுமைகளை பொருளாதார, சமூக, கலாசார அடிப்படையில் பிரித்து நோக்கலாம்.

**ஆய்வின் நோக்கங்கள்**

இஸ்லாமிய மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பல விடயங்களில் பிற சமூகத்தவர்களுடன் இணைந்துகொள்ள முடியாத வகையில் தங்களுக்கெனத் தனித்துவமான அடையாளங்களைப் பேணிவருபவர்கள். இருப்பினும் மதத்தினடிப்படையில் இருதரப்பினரும் இஸ்லாமியர்களாகவே காணப்படுகின்ற அதேநேரத்தில் தீவுப்பகுதிகளில் வாழ்பவர்கள் தமிழையும் கேரள மாநிலத்தில் வாழ்பவர்கள் மலையாளத்தினையும் பிரதான மொழிகளாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. காரணம் அவர்கள் தாம் வாழ்ந்துவருகின்ற சூழலின் அடிப்படையில் பெரும்பான்மையாக அப்பிரதேசங்களில் காணப்படுகின்ற மக்களின் மொழியைப் பிரதான மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வின் பிரதானமான நோக்கமானது இரு பிராந்தியங்களிலும் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்களது பண்பாட்டு சார்ந்த வேற்றுமைகளை இனங்காண்பதும் அவற்றின் சிறப்புக்களை எடுத்துக்காட்டுவதும் அவற்றுக்கான பின்னணியினை வெளிக்கொணர்வதும் அவற்றினை ஆவணப்படுத்தி எதிர்கால ஆய்வாளர்களுக்கு உதவுவதுமாகும். மேலும் இத்தலைப்பில் எவரும் தற்காலம் வரை விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளவில்லை என்ற குறையினையும் நீக்குகின்ற வகையில் இவ்வாய்வானது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**ஆய்வு முறையியல்**

ஆய்வு அறிமுகமானது, முன்னணியாகவும் அதனுடன் இணைந்தவகையில் ஏனைய ஆய்வு தொடர்பான கட்டமைப்புக்களை உள்ளடக்கியதாகவும் இவ்வாய்வானது அமைந்துள்ளது. அந்தவகையில் வரலாறு, சமூகவியல், பண்புசார், அளவுசார் மற்றும் ஒப்பீட்டு ஆய்வாக இது அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வாய்வானது பெருமளவிற்குக் கள ஆய்வாகவே அமைவதனால் இவ்வாய்வினை நேர்த்தியாகப் பூரணப்படுத்துகின்ற வகையில் முதல்நிலைத் தரவுகளும் இரண்டாம் நிலைத்தரவுகளும் ஆய்வினது தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. அந்தவகையில் முதல் நிலைத்தரவுகள் என்ற அடிப்படையில் அதிகளவிற்கு நேர்காணல் முறையே பயன்படுத்தப்பட்டுள்ளன. சம்பவ இடங்களுக்குச் சென்று அவர்களுடன் உரையாடல் செய்வதன் மூலமாக தகவல்கள் பெறப்பட்டு ஆய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவுகள் வரிசையில் முதல்நிலைத்தரவுகள் சிலவற்றினை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்திலிருந்து பெறப்பட்ட சில ஆக்கங்கள் என்பன பயன்படுத்தப்பட்டு சமூக வரலாற்றியல் அணுகுமுறையின் அடிப்படையில் நோக்கப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு**

பொதுவாக இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக நூல்கள், கட்டுரைகள் என்பன வெளிவந்தாலும்கூட தீவக இஸ்லாமியர்கள் தொடர்பாகவோ அல்லது இவர்களுக்கும் கேரள மாநிலத்தில் காணப்படுகின்ற இஸ்லாமிய மக்களுக்குமிடையிலான உறவுகள் பற்றியோ விரிவான ஆக்கங்கள் எதுவும் குறிப்பிடும்படியாக வெளிவரவில்லை. இருப்பினும் கலாநிதி க. அருந்தவராஜாவினுடைய *'யாழ்ப்பாண முஸ்லிம்கள்'* (2012), மயில்வாகனப் புலவருடைய *'யாழ்ப்பாண வைபவமாலை'* செ.இராசநாயகத்தினுடைய *'யாழ்ப்பாணச் சரித்திரம்-மீள்பதிப்பு'* (1999) எம்.எஸ்.அப்துல் றஹீமினுடைய *'யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும்'* (1971) போன்றவற்றினை ஓரளவிற்கு இவ்வாய்வுடன் தொடர்பான சில கடந்தகால ஆய்வுகளாகக் கொள்ள இடமுண்டு. இத்தகைய வெளியீடுகளில் க. அருந்தவராஜாவினுடைய வெளியீட்டில் ஓரளவிற்கு ஒப்பிட்டுச் சில விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலுங்கூட விரிவானதாக அமையவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுப்பிரச்சினை**

ஆய்வில் ஈடுபடுகின்ற ஆய்வாளனொருவனுக்கு அவ்வாய்வினைப் பூரணப்படுத்த முற்படுகின்றபோது பல்வேறு பிரச்சினைகள் எழுவதென்பது தவிர்க்க முடியாததே. அவ்வகையில் முன்னோடியான இலக்கியங்கள் குறைவாகக் காணப்படுவதென்பது ஒருபுறமிருக்க இவ்வாய்வில் நேர்காணல்களில் ஈடுபட்ட சமயத்தில் சரியான தகவல்களை அநேகர் வேண்டுமென்றே பல்வேறு காரணங்களைக் கூறி மறைத்தனர். குறிப்பாக இஸ்லாமியப் பெண்களிடம் இத்தகைய பிரச்சினைகளை என்னால் சந்திக்க முடிந்தது.

**சுருக்கமும் முடிவும்**

இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ள தீவுப்பகுதிகளில் குறிப்பாக நயினாதீவு, வேலணை ஆகிய பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமிய மக்களில் அநேகர் கேரள மாநிலத்துடன் தொடர்புடைய பூர்வீகத்தினைக் கொண்டவர்களாகவே தம்மை அடையாளப்படுத்துகின்றனர். ஒல்லாந்தரது ஆட்சிக் காலத்தில் இப்பிரதேசங்களுக்கு முத்துக்குளிக்கின்ற நோக்கத்துடன் வந்த இஸ்லாமியர்கள் காலப்போக்கில் இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்து நிரந்தரமாகக் குடியேறினர். இதனால் இவர்கள் தாம் உயர்வான தூய கேரள இஸ்லாமியர்களெனக் கூறுகின்றனர். அவ்வாறு இருந்தும் இவர்களது பழக்கவழக்கங்கள், சடங்கு முறைகள், நடவடிக்கைகள் யாவுமே இலங்கையின் பிற பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற இஸ்லாமியர்களது நடவடிக்கைளிலிருந்து மட்டுமல்ல தமது தாய்ப் பிரதேசமான கேரள இஸ்லாமிய மக்களது செயற்பாடுகளிலிருந்தும் வேறுபட்ட நிலையில் காணப்படுகின்றன. இது ஆச்சரியப்படக் கூடியதொன்றாகும். ஏனெனில் மதத்தினாலும் பூர்வீகத்தினாலும் ஒன்றுபட்ட இரு பகுதியினரதும் பண்பாடு தொடர்பான செயற்பாடுகளில் மாற்றங்கள் காணப்படுகின்றன.

தீவுப்பகுதியில் வாழ்ந்து வருகின்ற தமிழ் மக்களுடன் இவர்களுக்கிருக்கின்ற இரத்த உறவானது கேரளாவில் வாழ்கின்ற இஸ்லாமியர்களுக்கு இருக்கவில்லை. தீவுப்பகுதிகளில் வாழுகின்ற தமிழர்களை இங்குள்ள இஸ்லாமியர்கள் உறவு முறைப் பெயர்களான அண்ணன், தம்பி, பெரியப்பா, பெரியம்மா போன்ற பெயர்களைச் சொல்லியே அழைப்பர். கேரளாவில் இத்தகைய தன்மைகளை அவதானிக்க முடியாது. தீவுப்பகுதிகளைப் போன்று கேரளாவில் விரும்பித் திருமண உறவினை தமது இனத்தவரைத் தவிர பிற இன மக்களுடன் இஸ்லாமிய மக்கள் ஏற்படுத்திக் கொள்ளமாட்டார்கள். இவ்வாறே இவர்கள் செய்கின்ற தொழில், இடப்பெயர்வு, தொழுகை முறைகள், பள்ளிகளின் அமைப்புக்கள், பேச்சு வழக்குகள், சடங்குகள், நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் என தமது தாய்நாட்டிலிருந்து பல அம்சங்களில் வேறுபட்ட இயல்பினைக் கொண்டவர்களாகத் தீவக இஸ்லாமிய மக்கள் காணப்படுகின்றனர். இதுவே ஆய்வின் முடிவாகவும் அமைகின்றது. எது எவ்வாறாயினும், தமது மதநம்பிக்கையினைப் பொறுத்தவரை இவர்கள் இருபகுதியினரும் இறுக்கமான நிலையிலேயே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**உசாத்துணை நூல்கள்**


அருந்தவராஜா, க. (2012), யாழ்ப்பாண முஸ்லிம்கள். அஞ்சு பதிப்பகம்: நல்லூர்.

அப்துல்றஹீம், எம்.எஸ். (1971), யாழ்ப்பாண முஸ்லிம்களின் வரலாறும் பண்பாடும். இஸ்லாமியக் கழகம்: யாழ்ப்பாணம்.

இராசநாயகம், செ. (1999), யாழ்ப்பாணச் சரித்திரம். சென்னைப் பிரசுரக்கழகம்: சென்னை.

சிற்றம்பலம், சி.க. (1993), யாழ்ப்பாணத்தின் தொன்மை வரலாறு. யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்: யாழ்ப்பாணம்.

பத்மநாதன், சி. (2001), இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும். குமரன் பதிப்பகம்: கொழும்பு.